AE-28

[illegible] 200

உ

சிவமயம்.

அகஸ்தியமுனிவரருளிச்செய்த

# தீட்சாவிதி

உ௱.

சிதம்பரம்

சுப்பராயப்பிள்ளையால்

சென்னை

ஸ்ரீமட்டுவார்குழலாம்பாள்

அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1884.

உ

சிவமயம்.

# அகஸ்தியர் தீக்ஷாவிதி.

ஆறுமுகவனை நாலுமலர்கொடு?
கூறுமடியவர் பேறுபெறுவரோ!

வேறு.

பார்த்திடவேநந்தீசர்மூலமூர்த்தி
பண்பானவகத்தீசர்சட்டைநாதந்
கோர்த்திடவேபதஞ்சலியுங்கூனர்கண்ணர்
கோரக்கர்கமலமுனிசண்டிகேசர்
கூர்த்திடவேயிடைக்காட்டர்சிவாயசித்தர்
கொங்கணையரவர்தந்தைபோகநாதர்
கார்த்திடவேமச்சமுனிபுண்ணாக்கீசர்
காலாங்கிசுந்தரருங்காப்புத்தானே.

வேறு.

வானைத்தாவியபொதிகை மகத்தானரிஷியுடைய வாக்குநேர்மை, பானைத்தாவிய பூசைப்பரிவானசிவ யோகப்பண்போர்கேளும், மீனைத்தாவியராசிவிளங் கின்றகன்னிமுதல்வில்லுமேடஞ், சேனைத்தாவியது லாச்சென்மராசிக்கருவைச்செப்புறேனே. (க)

செப்புகிறேன்துலாத்தோர்க்குத்தேவிமுதல்வாசி
சிவனேடுமெந்திரங்களெல்லாஞ்சித்தி
ஒப்புகிறேன்குளிகைசித்திவாதசித்தி
யுகந்துநின்றகாயசித்தியுறுதியாகுந்
தப்புகிறேனென்றுலுந்தவறேட்டாது
சாதகமாய்வாசனையாய்த்தானேதூக்குங்
கொப்புகிறேனுலகத்தில்தசதீட்சைபெற்று
கொடியசிவயோகியெனக்கூறுவாரே. (௨)

கூறியதோர்கன்னிமுதல்மீனத்தோர்தான்
கொள்கியவர்வணிகளைப்போல்கூர்ந்துசெய்வார்
ஆறியதோர்மனம்பார்த்துப்பின்புகொள்வார்
ஆசைகொண்டுவெகுமனதாயாலோசிப்பார்
தேறியதோர்வாசியிலேமூண்டுநிற்பார்
தேவியுடபூசையிலேதிறமோகொஞ்சம்
மாறியதோர்மனம்பிடித்தால்வாதஞ்சித்தா
மயக்கமற்றுற்காயசித்திவருகுந்தானே. (௩)

தானென்றஅத்தமுதற்றனுசோன்கேளு
சாதகமாய்க்கொண்டேறித்தாயைப்போற்றி
வானென்றசமாதியிலேநின்றுதேறி
வாதசித்திவாசிசித்திவரவேசெய்வான்

கோனென்றகுருபூதத்தையடுத்துக்காப்பான்
குறையாமற்சாத்திரத்தைத்தேடிவைப்பான்
வேனென்றமாய்கையிலேமனதுகொள்ளாண்
வேதாந்தசாத்திரத்தைவிளங்குவானே. (௪)

விளங்கிநின்றமற்றேழுராசியோர்கள்
வெறும்பேச்சாய்த்திரிவார்கள்சித்தியில்லை
புளங்கிநின்றபூசைக்குள்வருவேனென்பார்
புகுந்தாலுமாயத்தேபுணர்ச்சிசெய்வார்
தளங்கிநின்றவாதத்தைச்சுட்டுமாய்வார்
சாத்திரமுங்குறுத்தேடார்தானேயென்பார்
அளங்கிநின்றுமலேவர்களறிந்துகொள்ளு
மவரோழுராசியோரறைந்திட்டேனே. (௫)

அறைந்திட்டராசிக்குவிபரங்கேளு
அப்பினேஉத்திரமும்அத்தத்தோடு
நிறைந்திட்டசித்திரையுஞ்சுவாதியானல்
நிலைக்குமடாகாயசித்தியோகசித்தி
பறைந்திட்டமூலமுதலுத்திராடம்
பாங்கானஅசுபதியும்பரணிதானும்
உறைந்திட்டுநின்றதொருஉத்திரட்டாதி
உத்தமனேரேவதியுமெத்தநன்றே. (௬)

நன்றானகோளோடுராசியானல்
நரசெனனமல்லவடாசித்தன்சித்தன்

கன்றானதோள்நின்றராசிதொட்டு
 கண்டுகொள்ளுமங்கியத்தின்பலத்தைச்சொல்வேன்
ஒன்றானகற்கடகஅங்கிசத்தி
 லுத்தமனேமதிநிற்கவேணும்வேணுந்
தன்றானதுலாமானஅங்கிசத்திற்
 சகலசித்தாஞ்சுக்கிரன்றானிருக்கப்பாரே. (எ)

பாரப்பாதனுசானஅங்கிசத்திற்
 பாங்கானவியாழன்றானிருக்கநன்று
நேரப்பாவிருச்சிகஅங்கிசத்தில்
 நேரானசெயவாய்தானிக்கநன்று
வேரப்பாசிங்கமென்றஅங்கிசத்தின்
 வேதாந்தவிதிநிற்கமெத்தநன்று
காரப்பாகும்பமென்றஅங்கிசத்தின்
 காரிநின்றால்காயசித்திகைக்குள்ளாச்சே. (அ)

ஆச்சப்பாகன்னியென்றஅங்கிசத்தி
 லாச்சரியம்புதனின்றால்ஞானியாவான்
வாச்சப்பாஇப்படிஅங்கிசங்கள்நின்றால்
 மாசித்தன்மாசித்தன்வாதஞானி
ஓச்சுப்பாஇதைவிட்டுவரவுவீட்டி
 லுயர்ந்துநின்றஅங்கிசத்தின்கிரகம்நின்றால்
மூச்சப்பாவஸ்திடத்தேவாசிசித்த
 மூதண்டஜயசித்தியாகுந்தானே. (கூ)

தாமென்றவாட்சியொடுவரவுவீட்டிற்
சத்துருவாம்அக்கிசத்திற்கிரகம்நின்றால்
வாமென்றவுலகத்தேயாசைகொண்டு
மாளுமட்டும்புலம்பியல்லோமாஅவராணாயா
கோமென்றராசியிலேகோளைப்பாரு
கூறான அங்கிசத்தினேசம்பாரு
பாமென்றகற்பமுண்ணசொன்னேன்மைந்தா
பாருலகிலறிவதற்குவறைகிறேனே. (௧௦)

அறைகிறேன்கற்பமுண்ணக்காலங்கேளு
அந்தநாளின்குணங்களறியச்சொல்வே
னிறைகிறேனிலக்கினத்திற்சுக்கிரன்றானன்று
நேரானவஞ்சிலேவியாழனன்று
வுறைகிறேனொன்பதினிற்செவ்வாய்நன்று
வுத்தமனோவாக்கிலேபுதனும்நன்று
பறைகிறேன்பதினொன்றிற்பானுநன்று
பாஙகானசந்திரனுமேழில்நன்வே. (௧௧)

நன்றாகஅப்படிதானிருக்கும்நாளில்
நலமானகற்பமள்ளிஉண்ணுஉண்ணு
கன்சூததசதீட்சைகேட்டாயானால்
கடுஞ்சுருக்குஞ்சித்தியுமாமிகவுமோர்ம்

பன்றானபத்துவிதங்கிடையாவிட்டால்
பாருலகிலஞ்சுவிததீட்சைகேளு
வென்றானஅஞ்சுவிததீட்சையில்லான்
விரைந்துகற்பமுண்டாலும்விழலாய்போமே. (கஉ)

போகாமல்தீட்சைபெற்றபெரியோர்பாதம்
பொற்பூவாலர்ச்சித்துப்பணிந்துபோற்றி
வேகாமலேநின்றகாலைக்கேளு
விளங்கியதோர்சாகாததலையைக்கேளு
வாகானவொண்டையுந்தானாருஞ்சொல்லார்
மகத்தானதசதீட்சைவந்தோர்சொல்வார்
சாகாமலிருக்கவென்றால்பஞ்சதீட்சை
சாதித்துக்கற்பமுண்டுதெள்ளிபேறே. (கங)

ஏறென்றுகற்பங்களனேகஞ்சொல்லு
மிதனாலேசித்தியில்லையென்றாயானா
லாறென்றுதீட்சையில்லாப்பாவத்தாலே
யாச்சரியச்சாத்திரங்கள்பொய்யாய்ப்போச்சு
வாறென்றவாதமெல்லாமண்ணாய்ப்போச்சு
வாறென்றால்தசதீட்சைவணங்கிக்கேளு
மாறென்றவயிரவனோநிருத்தஞ்செய்வார்
வாயிலிட்டமருந்தெல்லாஞ்சித்தியாமே (கச)

சித்திக்கவேணுமென்றாலிந்தமுறைபண்ணு
  சிதம்பரமும்தேவியுடபூசைபண்ணு
முத்திக்குமிதுபாதைமோட்சமில்லை [னார்
  முப்புரத்தைநகைத்தெரித்தோனெனக்குச்சொன்
பத்திக்கும்பிராணாயம்பண்ணும்போது
  பாங்காகப்பூசைபண்ணிகற்பமுண்ணு
எத்திக்குந்திரியலாமீசனாவாய்
  ஏதுபோவென்றுவிட்டால்இறப்பாய்நீயே (௰௫)

இறவாமல்சொல்லுகிறேன்பிராணாயாமம்
  எல்லாருஞ்சொன்னதற்குக்கருவோயில்லை
மறவாமல்நீகேளாபுலத்தியனேஅய்யா
  மகத்தானயோகமடாவாசியோகந்
திறவாதேயாருக்கும்வெளியாய்ச்சொல்வேன்
  செகத்திலேயிதையறிந்தால் சித்தனாவான்
பிறவாதேபிறப்பிக்கும்பூரணத்திலுள்ளே
  பேரானபிராணாயப்பெருமைகேளே (௰௬)

கேளப்பாசித்தருடசாத்திரங்களெல்லாம்
  கெடியானவாசியிலேபிராணாயமென்பார்
தாளப்பாசிலபேர்கள்சக்கரத்திலென்பார்
  தாக்கியல்[illegible]ததொருபிராணாயமென்பார்
நீளப்பாவிந்தநூலநேர்மையெல்லாம்
  நேரானசிவயோகியறிவானப்பா

சூளப்பாஇதுவெல்லாம்நாடிசுத்தி
சுகமாகக்காயசுத்தியாகும்வாறே. (௰எ)
வாறானபிராணாயவரிசைகேளு
வகையானபூரகமோமுப்பத்திரண்டு
ஆறானகும்பகமோ அறுபத்திநாலு
அடவானரேசகமோபதினாறப்பா
கூறானமாத்திரைதானிந்தவகையெல்லாங் [ண்
குறிப்பாகஅறிந்துகொள் மாத்திரையைச்சொல்வே
தாறானதலைசுற்றிநொடிப்பதப்பா [சே.
சமுசியங்களொன்றுமில்லை மாத்திரையொன்றாச்
ஒன்றானநாழிகைக்குமாத்திரைதான்கேளு
வுத்தமனேமுன்னூற்றிருபதாச்சு
நன்றானபிராணாயமூன்றுசெய்தால்
நலமானகடிகையொன்றேயாச்சுதப்பா
கன்றானபிராணாயஞ்சந்திரனில்வாங்கக்
கலக்குமடாநாடியெல்லாம்இறுகுஞ்சித்தி
தன்றானபிராணாயஞ்சித்தியாகச்
சாற்றுகிறேன்தீட்சைவிதிசாற்றுவேனே. (௰அ)
சாற்றுவேன்சிவ்னுடையதீட்சைமார்க்கஞ்
சதாசிவ்னுதானெந்தனுக்குபதேசித்தார்

போற்றுவேனுருத்திரனிலிரண்டுதீட்சை
பொலிவானமயேஸ்பரனிலிரண்டுதீட்சை
ஆற்றுவேன்சதாசிவத்திலஞ்சுதீட்சை
ஆதியென்றபராபரமாந்தீட்சையொன்று
மாற்றுவேன்மவுனமென்றதீட்சையொன்று
மகத்தானபூரணத்தில்நிற்குந்தானே. (உம)

தானென்றபதினொன்றுஞ்சிவதீட்சையப்பா
சத்தியுடதீட்சையினிசொல்லக்கேளு
வானென்றவாலையொன்றுதிரிபுரைதானொன்று
வந்துநின்றபுவனையொன்றுயாமளைதானொன்று
வானென்றஸ்ரீராஜமங்கையொன்று
மைந்தனேஉமாசத்திமார்க்கமொன்று
வூனென்றஅம்பிகாசத்தியொன்று
வுத்தமனேகணேசனென்றசத்தியொன்றே. உக)

ஒன்றானஈஸ்வரியாஞ்சத்தியொன்று
உயர்ந்துநின்றவுன்மனையாஞ்சத்தியொன்று
நன்றானதசதீட்சைமேலேயப்பா
நாதாந்தஞானசத்திமவுனதீட்சை
பன்றானபதினொன்றுஞ்சத்திதீட்சை
பாக்கியங்கள்செய்தவர்க்கேயெய்துமெய்தும்
குன்றானசிவசத்திரெண்டுதீட்சை
குறிப்பாகஇருபத்திரண்டுமாச்சே. (உஉ)

ஆச்சிந்ததீட்சைவிதிகேட்டோர்க்கையா
    ஆச்சரியச்சகலநூலவருக்கெய்து
மோச்சிந்தவாதமதுசொன்னபடிகேட்கும்
    உத்தமனேவயிரவிதானேவல்கேட்கும்
பாச்சிந்தப்பூசையிலேவஸ்துவைத்துப்
    பார்க்கையிலேசலமாகும்பாருபாரு
வாச்சிந்தத்தாதுவெல்லாமிறுகிக்கொண்டு
    மைந்தனேதாதுவிர்த்தியாகும்பாரே. (உரு)

பாரப்பாவவன்செய்யும்பிராணாயாமம்
    பரிவாகச்சிவதீட்சைப்பதின்மூன்றுந்தான்
நேரப்பாலெட்சியத்தேநிறுத்திவாங்கி
    நேராகக்காலையிலேசெய்வார்செய்வார்
சீரப்பாதசதீட்சைமகிமைமெத்த
    செகத்திலுள்ளகின்மூடர்காணமாட்டார்
ஊரப்பாயிருந்தாலென்காட்டில்வாழ்ந்தே
    யுத்தமனுஞ்சிவயோகியுரைத்துத்தேடே. (உச)

தேடியவர்பதம்போற்றிப்பிராணாயாமஞ்
    செப்புமென்றவடிதொழுதுசெப்பக்கேட்டு
நாடியவர்தசதீட்சைபிராணாயாமம்
    நாட்டிவைத்தாலவனுக்குப்பிராணாயசித்தி

நீடியதைவிட்டுவிட்டுவுலகத்தோர்கள்
நோகப்பிராணாயம்பண்ணிச்செத்தார்
கூடியிதையறிந்தவனேராசயோகி
குருவறியார்பிராணாயக்குருடுதானே (உரு)

குருடாகப்போகாமல்தீட்சைக்குள்ளே
கூடியல்லோபிராணாயம்பண்ணுபண்ணு
அருளானஅருள்வந்துவுன்னைத்தூக்கும்
அப்பவல்லோகாயசித்தியாகுந்தேக
மருளானமருளைப்போல்தீட்சைவிட்டால்
மண்ணாச்சுப்பிராணாயமொன்றுமில்லை
திருடானதிருப்பாட்டால்சித்தரெல்லாந்
திருட்டுவித்தைப்பிராணாயஞ்செப்பினரோ. (உசா)

செப்புவேன்பிராணாயசித்தியாகச்
சிவன்சொன்னகற்பமுன்னேதின்றல்சித்தி
யொப்புவேன்கற்பத்தைவிட்டுநீயும்
யுகம்வரைக்கும்பிராணாயம்பண்ணினாலுந்
தப்புவேனென்றல்லோசீவன்தப்பிச்
சார்வானசாதகமாய்க்கற்பமுண்டால்
முப்புவேன்முந்நூற்றிருபத்திரண்டு
மூதண்டருத்திரன்போலிருந்துபாரோ (உஎ)

பாரப்பாதுலாமென்றராசியோர்க்குப்
பரிவாகச்சித்திகளுஞ்சித்தியெல்லா

நேரப்பாகன்னியென்றராசியோர்க்கு
நிலையாகமனமுறைத்தாற்சித்தியாகுஞ்
சீரப்பாமற்றுளாத்தராசிக்கெல்லாஞ்
சித்தியாமனமுறைக்கமாட்டாமாட்டா
காரப்பாதசதீஉசைவந்தோர்பாதங்
காராட்டாலொன்றுமிலலேகண்டுதேறே (உஅ)

தேற்றவேபிராணயக்கருவைச்சொல்வேன்
சிவனார்தானெந்தனுக்குஉபதேசித்தார்
ஆறவேமுந்தமுந்தப்பியாசமார்க்கம்
அடிமுதலிற்சொல்லுகிறேனப்பாகேளு
கூறவேமூலத்தில்வாசிரெண்டு
கோழிமுட்டைபோலிருந்துமுக்கோணத்தில்
மாறவேயிடைபின்னயிரண்டுமாடு
மற்றொன்றுசுழிமுனேதான்மகிழ்ந்துகேளே. (உகூ)

கேளிந்தஇடைகலேயில்வங்கென்றுவாங்கிக்
கெடியாகச்சிங்கென்றுதம்பித்தேநில்
நாளிந்தப்படிநீதான்பழக்கம்பண்ணு
நலமானமூலத்தின்மேலேசாடித்
தாளிந்தத்தாதுவெல்லாஞ்சுத்தியாகுஞ்
சாதகமாயிரண்டொன்றில்தானேகாணும்

ஆளிந்தவாசிக்குமவ்வளவேசித்தி
யப்பியாசமார்க்கமிதுவடிதான்காணே- (௩௰)

காணிந்தமுறையல்லோசித்தரெல்லாங்
காயசித்தியாகுமென்றுபாடிப்போட்டார்
தோணிந்தப்படிபார்க்கவுலகத்தோர்தான்
சூழ்ந்துகொண்டநரையாலுஞ்சுழன்றுசெத்தார்
வீணிந்தப்படிபார்த்தால்கெட்டுப்போவார்
வெகுசுருக்காய்சொல்லுகிறேன்சித்தியெல்லாம்
பூணிந்ததசதீட்சையாதிக்குள்ளே
புகட்டியல்லோமனமுறைத்துப்புகழாய்பண்ணே,

பண்ணையிலேபிராணயம்புலத்தைக்கேளு
பாங்கானரோமமெல்லாம்வெயர்வையோடி
மண்ணையிலேதசதீட்சையிரண்டிலூன்றி
யதுக்குள்ளேபிராணயம்பண்ணும்போது
கண்ணையிலேசடத்தினுள்ளேதோஷமெல்லாங்
கக்குமடாநெய்போலேகண்டுபாரு
தண்ணையிலேமூன்றிநின்றுபிராணயந்தானுஞ்
சதாசிவம்போல்பிராணயம்பண்ணக்கேளே (௩௨

கேளப்பாசட்டையொன்றுதிரண்டுபோகுங்
கெடியானசிவதீட்சைநாலில்நின்று
[illegible]ளபபாநிலேத்துபார்சடத்தினுள்ளே
நிறைந்துநின்றநோய்களெல்லாம்நீறுய்ப்போகு

மாளப்பாசிவதீட்சையஞ்சினுள்ளே
படுத்துநின்றுபிராணயம்பண்ணப்பண்ண
நாளப்பாசட்டையொன்றுதள்ளிப்போகும்
நலமானதேகமதுசிவப்புமாமே. (௩௩)

சிவப்பாகுங்கண்கள்ரெண்டுமிறுகுந்தேகஞ்
சிவசிவாசக்கரங்களாறுங்காணு
முவப்பாகும்பஞ்சகர்த்தாவருந்தான்வந்து
வுகந்துளவாய்கேட்பதெல்லாமுதவிசெய்வார்
தவப்பாகும்நிருவாணியேவல்கேட்பார்
சகலமுறைவாத்மெல்லாந்தானேசித்தி
உவப்பாகுங்குளிகைவிட்டாலோடும்வேக
மோங்கிநின்றவஞ்சுவிதீட்சையாட்டே. (௩௪)

ஆட்டானசிவதீட்சையாறில்நின்று
அப்பனேபிராணயம்பண்ணினோர்க்கு
மூட்டானதூரதிட்டியெல்லாங்காணு
மூதண்டசடத்திலொருசட்டைதளருங்
கூட்டானவினைகளெல்லாமகன்றுபோகுங்
கூர்ந்துபார்சுழிமுனையோரவியாயக்காணும்
பூட்டானபூட்டெல்லாம்தெறித்துப்போகும்
பொற்பதுமம்போலவுந்தானிருக்கும்பாரே. (௩௫)

பாரப்பாசிவதீட்சையேழில்நின்று
பரிவாகப்பிராணயஞ்செய்யும்போது

நேரப்பாசட்டையொன்றுவெளுப்பாய்த்தள்ளும்
  நிர்மலமாய்மதியினுடகாந்திகாணுஞ்
சேரப்பாவுன்மனையும்வாவாளன்பாள்
  செடமெல்லாம்வண்டுபோற்சேர்ந்துகாணு
மாரப்பாயிதுவனைக்குந்தீட்சைசொல்லி
  மவரவர்கள்செய்தவத்தாலெய்துங்காணே. (ந௬)

எய்துமென்றசிவதீட்சையெட்டில்நின்று
  இதமாகப்பிராணயஞ்செய்தோர்க்கையா
நைதுமென்றசடந்தூக்குநினைத்தபடியாகும்
  நலமானகூடுவிட்டுக்கூடுபாயுங்
கைதுமெனநின்றவர்க்குப்பிரானமாகும்
  கண்திறக்கவொட்டாமலகரியேறுங்
கொய்துமென்றபூவேதுவர்மமேது
  கூடினார்நாதாநதக்குறியில்தானே. (ந௭)

தானென்றசிவதீட்சையொன்பதிலேநின்று
  சாதித்துப்பிராணயஞ்செய்தாலய்யா
கோனென்றரவிபோலேதேகமாகுங்
  கூப்பிட்டால்சித்தரொல்லாம்வணங்கிநிற்பார்
ஊனென்றசடம்போச்சுக்கயிலாசத்தே
  யுகந்தனக்குவாச்சுதடாமைந்தர்பாரு
வானென்றவெளியெல்லாநீயாய்க்காணும்
  வார்த்தையினலட்டமாசித்தியாமே. (ந௮)

சித்தியாஞ்சிவதீட்சைபத்தில்நின்று
 செய்தவற்குப்பிராணுபமென்னசொலவேன்
பத்தியாய்தீபம்போல்செடமேகாணும்
 பாங்கானகத்தியுமோநடுவேயாகும்
அத்தியாமகண்டசிவமாகிநிற்பார்
 அப்பனேயிதுவல்லோசொரூபசித்தி
முத்தியாமாறுவரைசித்தராட்டு
 முழுமோசகுளிகையென்றுஎச்சிட்டாரே. (கூசு)

எச்சிட்டார்சிவதீட்சைபத்தையுந்தான்
 இத்மாகமறைத்தல்லோவாசியென்றார்
மாச்சிட்டகுளிகையென்றார்காயசித்தியென்றார்
 மாயைப்போலொழித்தல்லோமாயன்செய்தார்
ஓச்சிட்டதசதீட்சைவந்தோராகில்
 உண்மையுள்ளபிராணுயக்கருவுஞ்சொல்வார்
வாற்சிட்டதீட்சையெல்லாங்கடந்தபின்பு
 மவுனமென்றதீட்சையைத்தான்மருவிக்கேளே.

கேளப்பாஅகண்டத்தில்மவுனதீட்சை
 கெடியானகேசரியில்காணுங்காணும்
நாளப்பாமந்திரங்களொன்றுமில்லை
 நாவில்லைப்பாவில்லைநாளென்பதில்லை

சூளப்பாவகண்டவெளிகோடிபானுங்
சுடர்கோடிகாந்தியதுகாணுங்காணும்
வாளப்பாஇதுவல்லோமவுனதீட்சை
மகத்தானகுருச்சொல்லிமாட்டுவாரோ. (சக)

மாட்டினலகண்டத்திலயித்துப்போகு
மைந்தனேதானதுவாமதுதானகு
மூட்டினர்கற்பவரைசமாதியாகு
மூதண்டரிஷிகளுக்குமடுத்தவாறு
கூட்டினல்மனம்வேறேபிறியொட்டாது
கூட்டிப்போய்பூரணத்தில்கூர்ந்துநிற்கும்
ஊட்டினல்மவுன்மென்றதீட்சையாச்சு
வுத்தமனேபதினென்றுமுடிந்தவாறே. (சஉ)

வாருனவுலகத்தில்விட்டகுறையோர்க்கு
வந்துதென்றல்சிவதீட்சைமைந்தாகேளு
வீரானசிதம்பரமுந்தேவியுடபூசை
மெச்சியல்லோபூசித்துசித்திசெய்து
கூருனவாதசித்திபார்த்துக்கண்டு
கூறினல்மோசமென்றுங்கூருர்கூருர்
மாருனபாவங்களொன்றுசெய்யார்
வந்தபேருலகத்தில்வாய்பேசாரோ. (சங)

பேசாதேயிருந்துகொண்டுசமாதிபார்த்துப்
பிரிவரகலட்சியத்தைதொட்டுதொட்டு
ஏசாதேபிராணயமேற்றியேற்றி
யிழுத்திழுத்துவிடுவார்கள்மறவாமற்றான்
ஓசாதேகற்பமுண்டுபிராணயத்தை
யுணர்ந்திடுவார்பின்புதானிந்தப்புத்தி
வாசாதேதசதீட்சைவந்திருந்தோரூரில்
வாராதுவாராதுவினைகள்தானே. (சச)

வினையில்லைபவளாகித்தந்தெரிசனமேசெய்தால்
வேதாந்தசாரத்தேமணமூந்தேறும்
வினையில்லையவர்பதத்தைப்போற்றிநிற்க
வேண்டியவர்மனதுவந்துதிரும்பமட்டும்
வினையில்லையுமையடுததேன்தீட்சைசொல்லும்
வேதாந்தசிரோமணியேயென்றுகேட்டு
வினையில்லையென்னுடையவுடல்பொருளுமாவி
விளங்கியதோரரூபத்தால்தாளாயூற்றே. (சரு)

ஊற்றியதோர்பதம்போற்றித்தீட்சைகேட்டு
வுய்த்துநின்றலட்சியங்கணன்றாய்க்கேட்டு
மாற்றியிந்தலட்சியத்தில்பிராணயம்வைத்து
வாஙகிறதோர்தீட்சைவிதிவைத்தேயேறி
யேத்தியந்தப்பிராணயத்தீட்சையொன்று
இருத்திப்பிராண்டொன்றிலிதுதான்சத்தி

போற்றியந்தபிராணயந்தீட்சைபத்தும்
புகழாசச்செய்பவனேசொரூபியாமே. (சசு)

ஆமப்பாதசவருஷமார்தான்செய்வார்
ஆச்சரியம்ரிஷிகள்செய்வார்சித்தர்செய்வார்
ஓமப்பாவுலகத்தோர்செய்யமாட்டா
ருத்தமனேயுலகத்தோர்செய்தாற்கேளு
சோமப்பாவூட்டிவிக்குமுத்திமுத்தி
சுகமாகஅட்டமாசித்தியாடுங்
காமப்பால்விடுகாமல்கட்டிநின்று
காயசித்தியாவதற்குக்கற்பங்கேளே. (சஎ)

## கற்பகமுறை.

கேளுநான்சொல்லுகிறேன்கற்பத்துக்குக்
கேடியாகச்சித்தர்சொன்னகற்பமெல்லாந்
தானுமென்றுயான்சொன்னேன்சமுசயமுண்டானல்
சாதிப்பாருலகத்தில்தங்கமாகும்
வாளுவான்பிராணயம்பண்ணும்போது
மருவியுன்னுமாண்டிலேகெவுனஞ்சித்தி
நாளும்யானுண்டபடியுனக்குச்சொன்னேன்
நற்சீஷனுக்காலவர்க்குச்சொல்லே. (சஅ)
சொல்லையிலேதசதீட்சைமுன்னேசொல்லிச்
சொற்பெரியபிராணயக்கருவுங்காட்டித்

தில்லை இலேநடராசன்சக்கரமுங்காட்டித்
தேவியுடசக்கரத்தின்பூசைகாட்டி
தொல்லை இலேவிழுகாமலலொல்லுநீதான்
சோதிக்கசீஷனுடமனதைக்கண்டு
எல்லையிலேலட்சியத்தினியல்புங்காட்டி
பிதமாகவிவைமுழுதுங்காட்டுநீயே. (சகூ)

## காந்தசெந்தூரம்.

நீகேளுபுலத்தியனேகற்பமார்க்கம்
நிர்மலமாஞ்சதாசிவனாெனக்குச்சொன்னார்
வாகேளுகாந்தமதுகொண்டுவந்து
மைந்தனேகொள்ளோடேவேகவைத்துப்
பாகேளுஆட்டுரத்தமதிலேவார்த்து
பண்பாகஅதினுடையதோலால்கட்டி
தாகேளுநெற்குழியிற்கூடவைத்துச்
சாதகமாயாறுதிங்கள்தாண்டிவாங்கா. (ரு0)
வாங்கியதோர்காந்தத்தைநொருக்கிக்கொண்டு
மைநதனேவேப்பங்காய்சாற்றாலாட்டித்
தாங்கியதோளொள்ளுமொச்சைகுன்றிகாரஞ்
சாதகமாயுழுந்தோடுபுருவினெச்சம்
ஓங்கியதோர்குதிரையுடகுளம்புச்சீவ
லுத்தமனேசீனம்பூநாகந்தானும்

பாங்குயதோர்முக்கொழுஞ்சிவேரிஞேடு
பரிவானகாட்டாமணக்கின்வித்தே. (ருக)

வித்தோடுவகைவகைக்குப்பலந்தாஞென்று
விளங்கியதோர்ரெண்டுபத்துப்பலந்த 'ன்காந்தங்
கொத்தோடுஇதுவெல்லாமரைத்துக்கொண்டு
கூசாமல்தாக்குலேயிற்கொடுத்துவாநீ
புத்தோடுமணிமணியாயிறங்கிப்போகும்
பாங்கானகாந்தத்தின்சத்துத்தானுஞ்
சத்தோடுகாந்தமெல்லாமெடுத்துக்கொண்டு
சாங்கமாவுருக்கவுந்தான்துறையைக்கேளே. (ருஉ)

கேளப்பாவெண்காரம்பலந்தானுலு
கெடியானதுரிசியதுபலந்தாஞென்று
நாளப்பாசவுக்காரமரைப்பிலமும்போடு
நலமானசாரமதுகால்பலமும்போடு
நீளப்பாவெடியுப்புசயநீரோடு
நிறைந்துநின்றசாரநீர்க்கூடவிட்டுச்
சூளப்பாவரைத்தெல்லாமஞ்சுபங்குபண்ணிச்
சுகமானஒருபங்கிற்பிசறிவையே. (ருங)

வைத்தல்லோகுகையினுள்ளேதாக்கியூது
மைந்தனேகாந்தசத்துமணியாய்நிற்கும்
நைந்தல்லோவிதையெடுத்துடைத்துக்கொண்டு
நலமானநாலுபங்குமிப்படியேயூது

கைத்தல்லோகாந்தசத்துமணியேயாகுஞ்
கைமுறையோதப்பாதுகருதிப்பாரு
ஐந்தல்லோகாந்தமதுஉருக்கினமாகி
அப்பனேசோதனையுமாச்சுபாரே. (ருச

## அயச்செந்தூரம்.

பாரப்பாஅயமெடுத்துருகச்சொல்வேன்
பரிவானஅயப்பொடியோபலந்தான்பத்து
நேரப்பாவங்காரம்பலமுமஞ்சு
நிலைத்துநின்றசவுக்காரம்பலமுமொன்று
சாரப்பாபாரையுப்புசெபமங்கட்டு
சாதகமாய்பலமரைதான்கூடக்கூட்டு
போமப்பாசாரமதுபலமுங்கால்தான்
பேராகவளைப்பலமுந்துருசுபோடே. (ருரு)

போட்டல்லோகல்வத்தில்வெடியுப்புநீரும்
புகழானசாரநீர்விட்டுஆட்டு
நீட்டல்லோவஞ்சுபங்குபண்ணிக்கொண்டு
நேராகஅஞ்சுதிரமுருக்கித்தீரு
பூட்டல்லோவயத்தினிடதோஷமெல்லாம்போக்கிப்
புகழானவெள்ளியைப்போற்கண்விட்டாகும

மூட்டல்லோயிதுமூட்டு அயமுருக்கமைந்தா
மூதண்டமாட்டிவிக்குமயத்தினுட்டே. (ருசு)

ஆட்டவே அயத்திலொருபலந்தான்வாங்கி
யந்திடைக்குமுன்வைத்தகாந்தசத்து
மூட்டிடவேரெண்டுமொன்றாயுருக்கும்போது
முத்திபெறத்தங்கம்ரெண்டுபலமேதாக்கு
நாட்டிடவேநாகமொருபலந்தான்கூட்டு
நடமாடுலிங்கமஞ்சுபலமேகூட்டு
பாட்டிலேசொன்னதென்றுஎண்ணவேண்டாம்
பளபளத்துக்கண்விட்டுக்களங்கதாமே. (ருஎ)

ஆமப்பாகளங்கெடுத்து நூற்றுக்கொன்று
அப்பனேநவலோகந்தன்னிற்பாச்சு
ஏமப்பாமற்றறியத்திராணியில்லை
யென்னசொல்வேன்காயசித்திக்கெடுத்தக்கற்பம்
நாமப்பாகளங்கதனைச்செந்தூரித்து
நலமாகநித்தமொருகுன்றியுண்ணு
தாமப்பாசரீரத்துக்காணியாகுஞ்
சாதகமாயாதிகற்பம்பாடினேனே (ருஅ)

பாடினாரிப்படியேஅங்கமெல்லாம்
பலபலவாய்ப்பிச்செறிந்துபாட்டாய்ச்சொன்னார்
நாடினார்சித்தருடநூலைப்பார்த்து
வுலகத்தோர்சுட்டலைந்தார்கோடாகோடி.

தேடினூர்தசதீட்சைகிடையாதென்று
　　செகத்திலேயிறந்தார்கள்கோடாகோடி
மூடினூர்சித்தரப்பாமெத்தநன்று
　　மூச்சுவைப்போர்சீடன்வந்தால்மூயன்றுபாரே.
முயன்றுகொண்டுசீடனுடகுணத்தைப்பாரு
　　மூதண்டகுணராசிபாருபாரு
வயன்றுகொண்டுமாயமுற்றகள்ளருண்டு
　　வார்த்தையினுல்பசப்பியல்லோ மயக்கஞ்செய்வார்
உயன்றுகொண்டுபிரமகுலத்துதித்தோராகி
　　யுற்றுப்பார்நித்தியகர்மகருமையெல்லாந்
தயன்றுகொண்டுராசகுலத்துதித்தோராகில்
　　சக்கரத்தைப்போற்றிசெய்வார்சார்ந்துபாரே. ( )

பாரப்பாவசியகுலத்துதித்தோராகில்
　　பரிவாகப்பணங்கேட்கில்லோபஞ்செய்வான்
நேரப்பாசூத்திரச்சாதியாகில்
　　நிலைத்துநின்றவேலையிலேகுணத்தைப்பாரு
சேரப்பாநற்குணமாய்நடந்தானுகில்
　　தெசதீட்சைமுந்தவைத்துத்திரத்தைக்காணு
தூரப்பாபாசமறத்தசதீட்சைசொன்னுல்
　　சொக்குனார்நரகத்திற்குருந்தான்காணே. (௬௧)

குருவுக்குநரகம்வரநடந்தசீஷன்
குலட்சயமாயாவிகொடிநரகில்வீழ்வான்
குருவுக்குமனம்வேறநடந்தாருகில்
குலங்கோடிபாவத்திற்குமுறிப்போவான்
குருவுக்குமனமுகந்துநடந்தசீஷன்
குவலயத்திலுத்தமனய்வாழ்வானப்பா
குருவுக்குமனதுவரநடந்தசீஷன்
குலங்கோடிமோட்சமெய்துஞ்சித்தனமே. (சூஉ)

## நாற்பத்துமுக்கோணம்.

ஆமப்பாபூசைவிதிசக்கரத்தைச்சொல்வேன்
ஆருந்தான்சொல்லார்களப்பாகேளு
ஓமப்பாதேவிகுமாதிபீடம்
உத்தமனேநாற்பத்துமுக்கோணந்தான்
காமப்பால்வித்தையிதுக்காதிவித்தை
காசினியிற்பூசைசெய்வோர்தசதீட்சைபெறமூர்
நாமப்பாஇவளைமுந்தப்பூசைபண்ணி
நலமாகசிவயோகத்திருந்திட்டேனே, (சூரு)

இருந்திட்டசக்கரத்தினியல்புகேளு
இதமாகவளையம்போற்கீறிக்கொண்டு
வருந்திட்டகுருக்கையிடரேகைதானு
மாதித்தனிரேகையொனறுதிங்களொன்று

கெரிந்திட்டசெவ்வாயினிரேகையொன்று
செயலானபுதனுடையரேகையொன்று
பரிந்திட்டகுருவினிடரேகையொன்று
பாங்கானசுக்கிரன்றனிரேகைதானே, (கூச)

தானென்றகர்ரியுடரேகையொன்று
சாதகமாய்ராகுவுடரேகையொன்று
கானென்றகேதுவுடரேகையொன்று
கைமுறையாயொன்பதையுங்குறுக்கேகீறி
பானென்றதேவியுடபாதரேகை
பாடினர்சிவனன்றுசக்கரமாய்மைந்தா
வானென்றசெவவாயினிரேகைமுனேரெண்டும்
வர்ங்கியல்லோகீழ்ராகுவளையத்தூட்டே. (கரு)

ஊட்டுவாய்மைந்தனுடரேகைமுனேரெண்டு
முத்தமனேவளையத்தின்மேல்முகத்திலூட்டு
நாட்டுவாய்திங்களுடரேகைமுனேரெண்டும்
நலமானகேதுவுடநடுமையத்தூட்டு
காட்டுவாய்ராகுவுடரேகைமுனேரெண்டுங்
கலங்காமனேக்கிரவிமையத்தூட்டு
பூட்டுவாய்கேதுவுடரேகைமுனேரெண்டும்
புகழானசெவ்வாயின்மையத்தாக்கே, (கசா)

தாக்கடாஆதிமுனேதானிரண்டுந்
தப்பாமல்சுக்கிரனர்மையத்தூட்டு

தேக்கடாசுக்கிரனாரிரேகைமுனையொண்டுந்
திரமாகத்திங்கள்மையஞ்சேருசேரு
போக்கடாபுதனுடையரேகைமுனையொண்டும்
புகழானராகுவுடமையத்தூட்டு
நோக்கடாராசாவினிரேகைமுனையொண்டும்
நுடங்காதேசனிமையத்தூட்டிப்பாரே. (சூஎ)

பாரப்பாஆதித்தன்வளையத்துள்ளே
பரிவானமேல்ரேகைரவியின்ரேகை
சேரப்பாஅதின்கீழேதிங்கள்ரேகை
சிறப்பாகஅதின்கீழேசெவ்வாய்ரேகை
பூரப்பாஅதின்கீழ்ப்புந்திரேகை
புகழாகஅதின்கீழேபொன்னின்ரேகை
வேரப்பாஅதின்கீழேவெள்ளிரேகை
விளங்கியதின்கீழ்ரேகைகாரியாமே, (சூஅ)

காரியின்கீழ்ராகுவடாகண்டுகொள்ளு
கைமுறையாய்ராகுவின்கீழ்கேதுரேகை
பாரிந்தப்படிகீறிமுனைபின்மையம்
பகுத்தறிந்துமுனையோடுமையுங்கூட்டி
தாரிந்தப்படியறிந்துகீறிப்பார்த்தால்
சக்கரம்போல்திரிகோணமுனைகள்காணும்

சகரிந்தநாற்பத்துமுக்கோணத்தைச்
சதாசிவனார்வகுத்தபடிசாற்றினேனே. (சுகூ)
சாற்றினதோர்சக்கரத்தின்மேலேகேளு
சார்வாகஎட்டிதழுமீரெட்டிதழு
மாத்தினதோர்வளையமிட்டுவெவ்வேறப்பா
வாகாகயிதின்மேலேயிருபத்தஞ்சிதழ்தான்
போற்றினதோர்பூரோகைச்சதிரமாகப்
புகழாகமூன்றுவகைகவரைந்துநீயும்
ஆத்தினதோர்நால்வாசல்விட்டுநன்று
யப்பனேசக்கரத்தின்மய்யங்கேளே. (எய)
கேள்ப்பாமையமென்றதிரிகோணத்துள்
கெடியானவிந்துவிட்டுநடுவேகேளு
நாளப்பாரீங்காரம்நடுவேயிட்டு
நலமானபதினாறுமிருபத்தஞ்சிற்
சூளப்பாஅகாரமுதல்க்ஷகாரவரைதானுஞ்
சுகமாகவைம்பதுடனென்றுங்கீறி
வாளப்பாவாசலிலேதேவதைகளுண்டு
வகையாகச்சொல்லுகிறேன்மருவிக்காணே. (எக)
காணடாதேவியுடகீழ்முகத்துவாசல்
கலங்காதக்ஷேத்திரனும்வடுகனிற்பான்
பூணடாமேல்முகத்திற்கணபதியுங்கந்தன்
புகழானவடமுகத்திற்சூலியொடுதுற்கை

தோணடாதென்முகத்தில்வீரபத்திரன்
துடியானகாளியுடன்நிற்பார்பாரு
ஊணடாநாலுதிக்குமட்சரங்கள்தானு
முத்தமனேதேவதைகளுறையும்பாரே, (எஉ)
பாரப்பாநால்வாசலானபின்பு
பரிவானஒருமூன்றுரெண்டுவீதி
நேரப்பாவட்டதுர்க்கியட்டநாகம்
நிலையானவட்டகெசமட்டசித்தி
காரப்பாவீதியொன்றிலிவர்களிடபீசங்
கைமுறையாயிட்டல்லோபூசைபண்ணு
தூரப்பாமறுவீதிசொல்லக்கேளு
துடியானவயிரவத்திருமைந்தானே (எங)
தானென்றவசீகரன்குரூரன்சண்டன்
சமரசமர்க்குரோதனுடன்மத்தனப்பா
கானென்றகபாலியொடுதட்சிணாமூர்த்தி
கைகண்டசங்காரரெண்டுபேரும்
வானென்றமறுவீதிபீசமிட்டு
வாகாகஅர்ச்சித்துமைந்தாகேளு
கோனென்றசக்கரத்தைச்சூழ்ந்துநின்ற
குறிப்பானதேவதையின்பெயரைக்கேளே (எச)

கேளப்பாதென்முகத்தில்தெட்சிணாமூர்த்தி
கெடியானவடபுறத்திற்சண்டிகேசன்
நாளப்பாயீசானமாதித்தனோடு
நலமானவயிரவனும்நிற்பாரய்யா
சூளப்பாசுரதேவர்பிருங்கியோடு
துடியானவாசலிலேதுவாரபாலர்
நீளப்பாவிவர்களுக்குப்பீசமிட்டு
நிலையாகச்சக்கரத்தைவிதித்திடாயே (எரு)

விதித்திருந்தசக்கரத்தின்விந்துக்குள்ளே
மேலானஞானசத்தியிருந்தாள்பாரு
மதித்திருந்தவவளைநிதம்வாலையென்பார்
மைந்தனேதிரிபுரைதான்புவனையென்பார்
கதித்திருந்தசாமளையாஞ்சத்தியென்பார்
கலியாணராசகேசரியாமென்பார்
பதித்திருந்தஉமாசத்தியம்பிகாதேவி
பாங்கானகௌரிசத்திபரிந்துகாணே (எசா)

காணப்பாயிப்படிதானுன்மனதில்பதித்துக்
கண்டுகொள்ளுமாதிசத்திநாமமென்பார்
ஊணப்பாயிவள்பத்துநாமத்துக்கு
முத்தமனேசத்தியுடதீட்சைபத்தும்

பூணப்பாவிதுகடந்துஞானசத்திப்
பூரணியாந்தீட்சையொன்றுபுகழ்ந்துகாணுந்
தோணப்பாதசதீட்சையட்சரங்களெல்லாஞ்
சுகமானசக்கரத்திற்போடுபோடே (எஎ)

போட்டல்லோவிதுகளிலேபூசைசெய்வார்
புகழானசிவயோகதீட்சைபெற்றோர்
மூட்டல்லோஞானசத்திநிருத்தஞ்செய்வாள்
மோசமில்லைவாதமொடுஞானசித்தி
பூட்டல்லோவிதுபூட்டுவாமத்துக்குப
பூட்டரியகுருபதத்திற்குண்டுபண்ணும்
நாட்டல்லோவாமிகள்தான்வெறும்பூசைபண்ணி
நலமாகவபாணித்துஅலைவார்தானே (எஅ)

தானென்றதசதீட்சையேதானய்யா
சகலசித்துமாடலாந்தாயுஞ்சொல்வாள்
வானென்னறஞாலமெல்லாம்வெட்டவெளியாகும்
வாயிலிட்டகுளிகையடாகெவுனமாடுங்
கானென்றவணிமாவும்லகுமாவோடு
கலந்துநின்றகிரிமாவுங்குலமாவோடு
போனென்றபிராப்தியொடுபிரகாமியமோடு
புகழானவயிரசத்துயீஸ்பரியுமாமே (எகூ)

ஆமப்பாஎட்டுப்பேரோவல்கேட்டு
அட்டாங்கயோகமுதலறுபத்துநான்கும்

ஓமப்பாஆடலாமிவர்களெட்டு
முத்தமனேயட்டவிதழுள்ளேபூசி
காமப்பாலுண்ணுவிப்பாளவிண்ணிலேற்றிக்
கருணையுடனீன்றெடுத்தஞானசத்தி
சோமப்பால்கொண்டவர்க்குச்சட்டைபோகுஞ்
சோதியாஞ்சிதம்பரத்தைச்சொல்லக்கேளே. (அ0)

## சிதம்பரசக்கரம்

சொல்லுகிறேன்சிதம்பரசக்கரத்தின்போக்குச்
சுகமாகப்பானுவைப்போல்விருத்தமொன்றிட்டு
அல்லுகிறேனதுமேலேவிருத்தமொன்றிட்டு
அடவாகஅதின்மேலேவிருத்தமொன்றிட்டு
மல்லுகிறேனிப்படியேவீணபமெட்டிட்டு
மைந்தனேசக்கரம்போல்வளைத்துக்கொண்டு
நல்லுகிறேனடுமெய்யம்விந்துக்குள்ளே
நலமானசிவபீசமொன்றுபோடே. (அக)

போட்டுரெண்டாவதுவளையத்துள்ளேகேளு
புகழானபஞ்சஇதழாகநீயும்
போட்டுமூன்ரும்வளையத்துளேய்ப்பா
பொலிவானஎட்டிதழ்தான்போடுபோடு
போட்டுநாலாகுந்தான்வளையத்துளளே
பொங்கமாய்ப்பதினைன்றுஇதழ்தான்போடு

போட்டுஅஞ்சாகுந்தான்வளையத்துள்ளே
பூணவேபதினெட்டுஇதழுந்தானே. (அஉ)

தானென்றஆறுகும்வளையத்துள்ளே
சகசமாயிருபத்திரண்டிதழுமிட்டு
வேனென்றவேழாந்தான்வளையத்துள்ளே
விளங்கவேயிருபஃதிதழும்போட்டு
மோனென்றஎட்டாகும்வளையத்துள்ளே
முப்பதுடனஞ்சிதழுமுசியப்போட்டு
வானென்றவளையங்களெட்டுக்குள்ளே
வகையாய்நூற்றிருபத்தஞ்சிதழுமாச்சே, (அங)

ஆச்சப்பாவீசானருமையுந்தான்
அப்பனேயகாரமுதல்மாறிக்கொண்டு
ஓச்சப்பாஇருபத்தைஞ்சிதழும்போட்டு
வுத்தமனேதென்முகந்தான்டனராசன்
வீச்சப்பாவடபாகம்வாமதேவம்
விளங்கியதோர்மகாரமுதல்மாறிப்போடு
கூச்சப்பாதென்புறத்தேயகோரந்தானுங்
கூருனசிகாரமுதல்மாறுமாறே. (அச)

மாறடாமேன்முகத்திற்சத்தியோசாதம்
வளமாகநகாரமுதலிருபத்தைஞ்சு

# தீட்சாவிதி

மாறடாகீழ்முகத்திற்றற்புருடமப்பா
வகாரமுதலெழுத்தைஞ்சுமாறுமாறு
மாறடாவஞ்சுமுகநூற்றிருபத்தஞ்சு
மாறடாயிப்படியேமனமகிட்சியாக
மாறினல்சித்தியெல்லாம்வசியமாகும்
வாகாகஇதனைநீமகிழ்ந்துகேளே. (அரு)

கேளப்பாககாரமுதல்க்ஷகாரந்தானப்பா
கெடியாகமுப்பதுடனஞ்சும்போட்டு
வேளப்பாவதின்கீழேயிருபத்தைஞ்சின்
விளங்கிநின்றஅம்முதலாய்ப்பதினறும்போடு
நாளப்பாபிருதிவியிற்பிருதிவிபின்பீசம்
நல்மானஅப்பிலேஅப்புபீசஞ்
சூளப்பாவன்னியிலேவன்னிபீசஞ்
சுகமாகஇட்டாக்காற்சுறுக்காம்பாரோ. (அசு)

பாரப்பாவாய்விலேவாய்வின்பீசம்
பரிவாகவிண்ணிலேஆகாசபீசம்
நேரப்பாயிப்படியேஅஞ்சுமுகமிட்டு
நிலையானசிவதீட்சைபதினென்றுமப்பா
சேரப்பாசக்கரங்களெல்லாம்போட்டுச்
சிவனுடையசக்கரத்தின்சூழ்வேதான்
தாரப்பாசதிரம்போல்மூன்றுரேகை
சாதகமாய்நால்வாசலிட்டுப்போடே. (அஎ)

போட்டல்லோமேல்வாசல்கணபதியுங்கந்தன்
புகழானகீழ்வாசல்கிரீடிபிருங்கி
நீட்டல்லோவடமுகத்தில்பத்திரகாளி
நிலையானவீரபத்திரசிற்பாரய்யா
மூட்டல்லோதென்முகத்தில்துர்க்கையோடு
மூதண்டக்ஷேத்திரனுமுயன்றுவைத்து
ஆட்டல்லோநால்வாசல்தேவதையின்பீசம்
அங்கங்கேவரைந்துவைத்தறிந்துபோற்றே, (அ௮)

போற்றடாஉள்வீதிவடபாகத்தில்
புகழானசண்டிகேசுரனைவைத்து
மாற்றடாமேல்பாகம்வீரரோடு
வாங்கிமல்தென்பாகஞ்சேத்திரன்றனுங்
கோற்றடாசன்னதியில்நந்திபீசங்
குறையாமலடுக்கவொருபீசஞ்சாத்திக்
காற்றடாவீசானமூலைபாகங்
காலதெண்டவயிரவனைவைத்திடாயே. (அ௯)

வைத்திடாயடுக்கவல்லோசூரியனைநீயு
மைந்தனேதொண்டாந்தான்வீதிக்குள்ளே
வைத்திடுவாயஷ்டகெசமஷ்டநாக
மகத்தானஅட்டசத்திபரிந்துவைத்து

நைத்திடுவாய்சிதாங்கன்சூரன்சண்ட
　ளலமானகுரோதனுன்மத்தனப்பா
கைத்திடுவாய்கபாலியொடுதட்சிணாமூர்த்தி
　கைகண்டசங்காரரொட்டுப்பேரோ, (௬௦)

பேரானஆவ்ரணத்தேவதைகளெல்லாம்
　பேரறிந்துபிசாபிட்டுச்சூழ்ந்துநீயும்
வீரானசக்கரத்தைத்தென்முகமாய்வைத்து
　மருவியதோரபிஷேகமெல்லாஞ்செய்து
தாரானதேகசுத்திபண்ணிநீயுஞ்
　சாதசமாய்வடமுகத்திலிருந்துக்கொண்டு
நேராகபாதுரு ரநியாசம்பண்ணி
　நிர்மலமாய ஞ்செழுத்துநியாசம்பண்ணே, (௬௧)

பண்ணடாக்ரமதனைநியாசந்தானும்
　பரிவாகச்சடங்கமென்றநியாசந்தானுங்
கண்ணடாவெகுசோடசநியாசந்தானுங்
　காரணமாய்க்குங்குமமாய்நியாசம்பண்ணு
விண்ணடாசிவமானதீட்சையோகி
　வேதாந்தசின்மயமாஞ்சிவனைப்பூசி
மண்ணடாதொட்டாலுஞ்சொர்னமாகும்
　வாயிலிட்டமருந்தெல்லாஞ்சித்தியாமே. (௬௨)

சித்தியடாகாயசித்திகுளிகைசித்தி
　செகமறியவாதசித்திவாசிசித்தி

பத்தியடாவட்டகர்மஞ்சித்தியாகும்
 பாரறியயோகசித்திஞானசித்தி
மூத்தியடாகுருபதத்தின்சகலசித்தி
 மூதண்டபரகாயசித்திசித்தி
யத்தியடாபூரணத்திலாறுவரைதாண்டி
 யாத்தாளுமப்பனையும்பூசைபண்ணே, (௬௩)

பண்ணடாதென்முகத்தில்சிவனைவைத்துப்
 பாங்கானதேவியுடசக்கரத்திலேதா
னண்ணடாவாமத்திலவளைவைத்து
 நலமானபாத்திரங்கள்முன்னேவைத்துக்
கண்ணடாகலசமுதில்சங்கம்வைத்துக்
 கண்டாதிசைகளெல்லாம்பெந்தம்பண்ணி
விண்ணடாகுருபதத்தில்குருவைநோக்கி
 வேதாந்தசின்மயமேயென்றுசொல்லே. (௬௪)

சொல்லியபின்வஸ்துவுடகடத்தைவாங்கிச்
 சுக்கிரனுங்கணேசனுடசாபந்தீர்த்து
மல்லியபின்பஞ்சகர்த்தர்சாபந்திர்த்து
 மைந்தனேஎன்னுடையசாபந்தீர்த்து
வல்லியபின்சித்தருடசாபந்தீர்த்து
 வன்னியுடனிரவிமதிகளையும்பூட்டி

ஓல்லியபின்சோடசமஞ்செழுத்தும்மோதி
உத்தமனேகடத்தைவைத்துவுசரப்பாரோ. (௬௫)

பார்த்ததல்லோசந்திரனில்மூர்க்கசத்திப்
பராபரையைக்கடத்தினுள்ளேபாவனையேசெய்து
கோத்தல்லேர்மஞ்சனநீர்க்கொண்டுநீயுங்
குறிப்பாககலசமெல்லாஞ்சுத்திசெய்து
பேரத்தல்லோவஸ்துமாங்கிஷவிபூதிப்
புலிதடதோலின்மேலிருந்துபிராணயம்பண்ணி
மாத்தல்லோபாத்திரத்திற்களைகளூட்டி
மைந்தனேபாத்திரத்தின்வகைகயைக்கேளே. (௬௬)

கேள்டாபோகமொன்றுகுருத்தானொன்று
கெடியானஸ்ரீயொன்றூதாரமொன்று
நாளடாபலியொன்றுஐந்துவைத்து
நலமானகலசத்தைமுன்னேபூசி
வாளடாவஸ்துவைத்தாறுதாரமூட்டி
மைந்தனேநாகவல்லியிலையால்மூடித்
தாளடாகெந்தமொடுபுஷ்பஞ்சாத்திச்
சக்கரத்தையர்ச்சிக்கச்சாற்றுவேனே. (௬௭)

சாற்றவேவலக்கரத்தில்புஷ்பம்வாங்கிச்
சாதகமாயிடக்கரத்தில்சுத்திவாங்கிப்

போற்றியேகுருவோடுகணபதியின்பீசம்
புகழான்ஆவரணதேவதைகளெல்லா
மாற்றியேவயிரவன்றன்வடுகன்சித்த
னப்பனோநவநாதவீரரோடு
மேற்றியேயட்டவயிரவருங்கூட்டி
யிதமாகப்பஞ்சகர்த்தாளின்னங்கேளே. (கூஅ)

கேளடாவம்பிகாசத்தியோடு
கெடியானவுருத்திரகணங்கள்தானு
நாளடாசகலசத்திசகலருத்திரன்
நண்பாகவர்ச்சிப்பாய்சக்கரங்கள்மொண்டில்
வேளடாஎரித்தசிவன்தேவியோடு
வேதாந்தநடனத்தைக்காட்டுவான்பார்
பாளடாமற்றதொருபூசையெல்லாம்
பரிவானகுருசொல்லப்பணிந்துகாணே. (கூகூ)

காணடாவர்ச்சனைகள்தீர்ந்தபின்பு
கைமுறையாய்ப்பாத்திரங்களவைத்துபூசி
பூணடாஅன்னமொடுபலகாரங்கள்
புகழானசத்தியொடுபோதவைத்துத்
தோணடாமணியோசைசங்கினோசை
துடர்ந்துநின்றசெயகண்டநாதவோசை
பூணடாநிவேதனஞ்செய்துநீதா
னாகராசிவசிவாவம்மாவென்னே. (ரு)

அம்மனொடுசிவனுக்குத்தூபதீப
மாலாத்திக்கற்பூரதீபங்காட்டி
அம்மனொடுசிவனுக்குச்சுகந்தம்வைத்து
ஆதியேகாரணமேயென்றுபோற்றி
அம்மனேசின்மயமாமகண்டஞான
ஆனந்தநாதாந்தவனாதியென்று
அம்மனொடுசிவனையுந்தான்பூசைபண்ண
ஆருக்குங்கிடையாதுவதிகந்தானே. (௱௯)

தானென்றகுருபத்த்தைகுருவைநோக்கிச்
சாதகமாய்குருவினிடபாத்திரத்தைக்கொண்டு
பானென்றலகரியிலேசேர்க்கிச்சௌக்கிப்
பூங்கானவுன்னறிவுதிடமேகொண்டு
கானென்றதத்துவமுந்தேகமூன்றுங்
கைமுறையாய்ச்சோதித்துப்பானம்பண்ணி
வானென்றசிவன்சத்தியிருவரையும்நோக்கி
மகத்தானபாத்திரத்தைப்பானம்பண்ணே. (௱௨)

பண்ணியல்லோலகரியினாலட்சியத்தினுள்ளே
பாடியல்லோபிராணயமூட்டிவாங்க
புண்ணியமேசெய்தவர்க்குத்திட்சைபோதும்
பொல்லாததுரோகிக்குக்கிடையாதப்பா

கண்ணியதோர்தசதீட்சைலட்சியத்தினுள்ளே
  காட்டியல்லோபிராணையமூட்டிவாங்க
நண்ணியதோர்பூரணந்தான்குருபதத்தின்மேலே
  நண்பானரவிபோலுங்காணும்பாரோ. (கOங)

பாரடாஅதுக்குள்ளேசொக்கிநிற்கும்
  பானுவுடகாந்தியென்னகோடியொப்போ
பூரடாவதுக்குள்ளேநினைவுபோச்சு
  பூசித்தமனம்போச்சுபத்திபோச்சு
வாரடாநானென்றசொல்லும்போச்சு
  ஆத்தாளையப்பனையும்பூசித்தால்முத்தி
சாரடாஇதுமுறைதான்கெடுக்கவேண்டாஞ்
  சண்டாளவாமத்தைக்கெடுத்தார்காணே (கOச)

கெடுத்தென்னவாமத்தில்சத்தியைத்தான்வைத்து
  கெடியாகப்பூசித்துச்சையோகித்து
மடுத்தென்னமஞ்சமிதான்முத்தியென்று
  மாயத்தேயலைந்தார்கள்மருளவாமி
அடுத்தென்னசித்தரொல்லாம்பெண்பூசிப்பா
  ரகண்டவெளிசத்தியைத்தானர்ச்சனையேசெய்வார்
படுத்தென்னஇல்லையில்லைசமாதியிலேநிற்பார்
  பாங்கானலகரியிலேநின்றுஏறே. (கOரு)

ஏறடாபராபரத்திற்பரமுந்தாண்டி
  இயல்பாகச்சிவந்தாண்டியிரசம்பொங்கத்

தேறடாநாதமொடுவிந்துதாண்டிச்
சிறந்தஇந்தஆறுதலஞ்சேர்ந்தேயேறி
வாறேதான்மேலேதானிற்குணத்தின்வீதி
மைந்தனேஅண்டத்திலமருவியூது
கூறடாஇதுவறிந்தாலவனேவாமி
கூறினேன்பூசைவிதிகுழைந்துகேளே. (கயசு)

கேள்ப்பாஇப்படியேபூசைசெய்தால்
கெடுமேசஞ்சிதம்பிராரத்துவங்காமியம்
நாளப்பாஇதுமூன்றும்போகவென்றால
நலமானபூரணத்திற்புக்கப்போகும்
